**September 20, 2011**

Honble Minister for Municipal Administration chaired a review meeting on the action to be taken for Flood Prevention



இன்று (20.9.2011) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே.பி.முனுசாமி அவர்களின் தலைமையில், வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் முனைவர் எஸ்.கருத்தையா பாண்டியன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் டி.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரிய நிருவாக இயக்குநர் முனைவர் ஜி.கோபால், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.